சுமையை எதிர்நோக்கி வருகின்றனர். விலை

சரி அல்லது உணவுப் பொருட்களும் விலையேற்றம

### அங்காடிக் கடைகளில்

# 111 பொருட்கள் பறிமுதல்

## கோலாலம்பூர் மாநகர் மன்றம் நடவடிக்கை




கோலாலம்பூர், பிப். 19-

கோலாலம்பூர் மாநகர் மன்றம் தலைநகரிலுள்ள தாமான் தாசேக் தித் திவங்சாவில் மேற்கொண்ட சிறப்பு அங்காடிக் கடை சோதனை நடவடிக்கையில் அங்குள்ள கடைகளுக்குச் சொந்தமான 111 பொருட்களை பறிமுதல் செய்தது.

பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களில் சைக்கிள், மின்சார ஸ்கூட்டர் போன்ற பொருட்கள் உட்பட மேலும் சில பொருட்களும் அடங்கும் என கோலாலம்பூர் மாநகர் மன்றம் நேற்று வெளியிட்ட ஓர் அறிக்கையில் கூறியது.

இச்சோதனை நடவடிக்கையில் அமலாக்கப் பிரிவு, வர்த்தக லைசென்ஸ், மேம்பாட்டு இலாகா, செத்தியா வங்சா கிளை அலுவலகம், தித்திவங்சா கிளை அலுவலகம், நிலப்பரப்பு, பொழுதுபோக்கு இலாகா, இயந்திரவியல், மின் பொறியியல் இலாகா ஆகியவை இடம் பெற்றிருந்ததாகவும் அது கூறியது.

லைசென்ஸ் அனுமதியை மீறி பொது இடங்களில் வியாபார பொருட்களை வைத் திருந்த குற்றத்திற்காக மேற்குறிப்பிட்ட பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்ட வேளையில், 9 கடைகளுக்கு சீல் வைக்கப்பட்டதாகவும் அந்த அறிக்கை கூறியது.

2026ஆம் ஆண்டு கோலாலம் பூர் மாநகர் மன்றத்தின் சிறிய சட்டத்தின் 24ஆவது பிரிவு, அங்காடிக் கடைக்காரர்களின் சிறிய லைசென்ஸ் சட்டம், 1974ஆம் ஆண்டு சாலை வடிகால், கட்டடச் சட்டத்தின் 46ஆவது பிரிவின் கீழ் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அந்த அறிக்கை கூறியது.

பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் அனைத்தும் செராஸ், ஜாலான் லொம்போங், தாமான் மிஹார்ஜாவிலுள்ள கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் அந்த அறிக்கை கூறியது.